**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவது – கூடுதலாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவிப்பது – தொடர் செலவினம் ரூ.29,71,400/– நிதி ஒப்பளிப்பது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.64** **நாள்: 14.10.2014**

**ஜய–புரட்டாசி 28, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கவும்:**

1. மாண்புமிகு அமைச்சர் (சந(ம)சஉதி) அவர்களின் அறிவிப்பு, நாள் 15.07.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் ந.க.எண்.400/சிப/2013, நாள் 23.07.2013.

---

**ஆணை:**

2014–15 ஆம் நிதியாண்டு, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கையின் போது, ஏனைவற்றுடன் மாண்புமிகு அமைச்சர் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பு செய்தார்கள்:–

> **“தற்போது, பார்வையற்றோருக்கான அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி சென்னையிலும், பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி திருச்சியிலும் இயங்கி வருகின்றது எனவே, தஞ்சாவூர் மற்றும் இதர மாவட்டங்களில் உள்ள பார்வையற்ற மாணவர்கள் மேல்நிலைக் கல்விக்கு சென்னைக்கு வர வேண்டிய நிலை உள்ளது. இதனால் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. இதனை அரசு கவனத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூரில் உள்ள அரசு பார்வையற்றோர் உயர் நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுகிறது. இதனால் தஞ்சாவூர் மற்றும் அதன் அருகாமையிலிருந்து வந்து, தஞ்சாவூர் பள்ளியில் உயர் நிலைக் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தங்களின் மேல்நிலைக் கல்வியை, தஞ்சாவூர் மேல்நிலைப் பள்ளியிலேயே தொடர இயலும். இப்பள்ளியைத் தரம் உயர்த்தும்பட்சத்தில், அரசுக்கு ரூ.80,71,400/– செலவினம் ஏற்படும்’’.**

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், தஞ்சாவூர், பார்வையற்றோருக்கான உயர்நிலைப் பள்ளியில் சுமார் 135 மாணவர்கள் படிப்பதாகவும், தஞ்சாவூரை சுற்றி உள்ள திருவாரூர், பட்டுக்கோட்டை, அரியலூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பார்வையற்றோருக்கான பள்ளிகள் இல்லையென்றும், பத்தாம் வகுப்பு வரை படிக்கும் இப்பகுதியைச் சார்ந்த மாணவர்கள், பதினோராம் வகுப்பு படிக்க, சென்னைக்கு 300 கிலோ மீட்டர் கடந்து செல்ல வேண்டியுள்ளதென்றும், குழந்தைகளை அவ்வளவு தூரம் அனுப்பி, கல்வி கற்பிக்க பெற்றோர்களால் முடியவில்லையென்றும், இதனால் அக்குழந்தைகளின் கல்வி முற்றிலும்

**[த.பி.பா]**

தடைபடுகின்றதென்றும் தெரிவித்து, தஞ்சாவூர், அரசு பார்வையற்றோருக்கான உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணை வழங்குமாறும், மேற்படி மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாகவும், தஞ்சாவூர் பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் கூடுதலாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் தோற்றுவித்தும், இதற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினத் தொகையாக ரூ.80,71,400/—க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, அவசர நிமித்தம் கருதி, இந்த கல்வியாண்டில் (2014—15), தஞ்சாவூர், பார்வையற்றோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக (ஆண்கள்) தரம் உயர்த்தியும், கூடுதலாக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கென தொடர் செலவினமாக ரூ.29,71,400/—க்கு (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்தோராயிரத்து நானூறு மட்டும்) பின்வருமாறு ஒப்புதல் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:—

| **<u>தொடர் செலவினம்</u>** | | | |
|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் (Upgrade post) | ரூ.15600—39100 + ரூ.5700 தர ஊதியம் ரூ.33,050 x1 x12 மாதங்கள் | ரூ.3,96,600 |
| 2. | பாட ஆசிரியர் | ரூ 9300—34800 + ரூ.4800 தர ஊதியம் ரூ.26,850 x 6x12 மாதங்கள் | ரூ19,33,200 |
| 3. | உதவியாளர் | ரூ. 5200—20200 + ரூ.2800 தர ஊதியம் ரூ.15,500x12 மாதங்கள் | ரூ.1,86,000 |
| 4. | தட்டச்சர் | ரூ. 5200—20200 + ரூ.2400 தர ஊதியம் ரூ.15,100x12 மாதங்கள் | ரூ.1,81,200 |
| 5. | அலுவலக உதவியாளர் | ரூ. 4800—10000 + ரூ.1300 தர ஊதியம் ரூ. 8700 x 12 மாதங்கள் | ரூ.1,04,400 |
| | உணவுச் செலவு | 2235—02—101—AA—6798 | |
| | மாணவர்களின் எண்ணிக்கை | 25 | |
| | எண்ணெய் மற்றும் சோப்பு | ரூ.30 x 25 x 10 மாதங் கள் | ரூ. 7,500 |
| | | ரூ.650 x 25 x 10 மாதங்கள் | ரூ.1,62,500 |
| | | **மொத்தம்** | **ரூ.29,71,400** |

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

| | |
|---|---|
| **2235—சமூகப் பாதுகாப்பும் நலனும் — 02—சமூகநலன் — 101—மாற்றுத் திறனாளிகள் நலன் — I—திட்டத்தில் சேராதது — AA-பார்வையற்றோர் பள்ளி<br>01-சம்பளங்கள் (து.தொ.கு.2235—02—101—AA-0105).** | **ரூ.28,02,000/—** |
| **67-உணவளிக்கும்/உணவுச் செலவுகள் — 09—ஏனையவை (து.தொ.கு.2235—02—101—AA-6798).** | **ரூ.1,70,000/—** |

**[த.பி.பா]**

**5.** மேலே பத்தி **3**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்ப்பார்த்து, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெற்று செலவிடப்பட வேண்டும். இதற்கான ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது–I) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணத்தைப் பெற தேவையான விண்ணப்பத்தை வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணை நகலுடன் நிதித் (வரவு–செலவு பொது–I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை சட்டமன்றப் பேரவையின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, **2015–16** ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய தருணத்தில் தக்க விளக்கக் குறிப்புடன் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வரசாணை, நிதித் துறையின் இசைவுடன், அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.**56889**/நிதி(சந)/**2014**, நாள் **14.10.2014**–ன்படி, கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.**1320**–ன் (ஆயிரத்து முன்னூற்று இருபது) கீழ் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78.**
மாநில கணக்காயர், சென்னை -**18.**
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை -**35**
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்.
முதல்வர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை – 78 வழியாக)

**நகல்:**
முதலமைச்சரின் முதன்மைச் செயலர், சென்னை–**9**
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (சந (ம) சஉதி) அலுவலகம், சென்னை–**9.**
நிதித்(சந) துறை, சென்னை–**9**
நிதித் (வரவு செலவு பொது–**1)** / (வ.செ.பொ.II) / (மை ம ஆ பி) துறை, சென்னை–**9**
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.